
# The Bible Standard

(தமிழ் வெளியீடு)



“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும். அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD FOR THE PEOPLE”**
**Isaiah 62 : 10**

**Translated from BS 884**
**Published on Dec 31, 2015**

**பொருளடக்கம்**

பழைய ஏற்பாடு .................................... 2

ஜலத்தினால் ஞானஸ்நானம் ................ 5

இஸ்ரயேலின் புது உடன்படிக்கை .............. 9

**BS Tamil Version - 32** **2016**



# பழைய ஏற்பாடு

## இன்று கிறிஸ்தவர்கள் அதனைப் பயன்படுத்தலாமா?

*The Old Testament Can Christians use it today?*

***"உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்: தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும் அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது." (1 பேது. 1 : 10–12).***

பழைய ஏற்பாடு வேத வசனங்களில் அடிக்கடி, இவ்வாறாகக் "கர்த்தர் சொல்லுகிறார்" என்று சொல்லப்பட்டிருக்கிறதை நாம் காண்கிறோம். ஆயினும் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற சிலர், புதிய ஏற்பாடு அதன் தெளிவான பிரகாசமான வெளிச்சத்துடன் தங்களுக்கு இருக்கிறபடியால், பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்கள் தங்களுக்கு இனி தேவையில்லை என்ற எண்ணத்தில் யேகோவா "நமக்காக" அதில் எழுதி வைத்திருக்கிற காரியத்தைக் குறித்து அற்பமாக மதிப்பிடுகிறார்கள். நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகளின் நாட்களில் வாழ்ந்தவர்களுக்கு பழைய ஏற்பாடு மிகப்பெரிய ஆசீர்வாதமாக இருந்தது என்று சில கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்; ஆயினும் அதில் பெரும்பாலும் எழுதப் பட்டவைகள் கிறிஸ்தவ நேமகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற கர்த்தருக்கு பிரதிஷ்டை செய்திருக்கிற ஜனங்களின் நன்மைக்காகவே முக்கியமாக எழுதப்பட்டிருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

தீர்க்கதரிசிகள் தாங்களே அறிந்து கொள்ளாதவைகளை முன்னறிவித்தனர். உதாரணமாக, எதிர்காலத்தில் தொலை தூரத்தைக் குறித்து தரிசனம் கண்ட தானியேல், அந்த காலத்தைக் குறித்து விசாரித்துக் கேட்ட போது, "**தானியேலே, போகலாம்: இந்த வார்த்தைகள் முடிவுகாலமட்டும் புதைபொருளாக வைக்கப்பட்டும் முத்திரிக்கப்பட்டும் இருக்கும்.**" "**அநேகர் இங்கும் அங்கும் ஓடுவார்கள், அறிவும் பெருகிப்போம்**" "**துன்மார்க்கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ உணர்ந்து கொள் வார்கள்.**" (தானி. 12 : 9, 4, 10) என்று சொல்லப்பட்டது. நம்முடைய நாளிலுள்ள அதிகரித்திருக்கும் போக்குவரத்தும் மற்றும் அறிவுப் பெருக்கமும், நாம் "முடிவு காலத்தில்" இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. "**எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரைக்கட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ் செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**" (லூக். 12 : 37-ஐ மத். 24 : 42-44; 25 : 13; வெளி. 16 : 15 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்).

நம்முடைய பாட தலைப்பு வசனத்தில் சுட்டிக்காட்டியபடி, அப்போஸ்தலர் பேதுரு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைக் குறித்துப் பேசும்போது, அவர்கள் தேவனுடைய ஆவி அல்லது வல்லமையால் ஏவப்பட்டு, என்ன எழுதினார்களோ அதின் முழு கருத்தையும் அறிந்து கொள்ளவில்லை என்று சொல்கிறார்.




**"நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்." நீதி. 4 : 18.**

(1 பேது. 1 : 11, 10) ஆவியால் இன்ன காலத்தைக் குறித்தா ரென்பதையும் (அவர்களுக்கு கொடுத்த காலம் சொல்லர்த்த மானதா அல்லது அடையாளமானதா என்பதையும்) அந்த காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள். தங்கள் நிமித்த மல்ல நமது (சுவிசேஷ யுக பிரதிஷ்டையாளர்கள்) நிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளிப் படுத்தப்பட்டது. நமது நிமித்தம் அவர்கள் ஊழியஞ் செய்தார்கள் இன்னும் செய்கிறார்கள். அவர்கள் தேவனுடைய வாயாக மட்டுமே பயன்படுத்தப்பட்டு ஞானம் மற்றும் அறிவாகிய பொக்கிஷங்களை சேமித்து வைத்தார்கள். அவைகள் விருத்திசெய்யப்பட்டு சுவிசேஷ யுகத்தின்போது வெளிப்படுத்தப் பட்டு, ஒவ்வொரு காலத்துக்கும் கொஞ்சம் கொஞ்சமாக "**காலத்துக்கு ஏற்ற ஆகாரமாக,**" [இந்த நாள் வரை முன்னேறி வருகிறது] தேவனுடைய பரிசுத்த ஆவியால் பரத்திலிருந்து அனுப்பப்பட்டு, விசுவாசமுள்ளவர்களை சகல சத்தியத்திற் குள்ளும் வழிநடத்தும்படியாக காலத்திற்கேற்றபடி பிரகாச மாக்கப்படுகிறது. (நீதி. 4 : 18; சங். 119 : 105).

பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக எழுதப்பட்டவைகள் நம்பத்தகுந்தவை என்று அப்போஸ்தலனால் 2 பேது. 1 : 21-ல் சான்றளிக்கப்படுகிறது: "**தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை** ["பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் கற்பனை செய்யப்பட்ட மனுஷ இருதயங்களின் விருப்பங்கள் அல்ல]; **தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப்** [பேசும்படியாக] **பேசினார்கள்.**" தேவனுடைய ஆவி அல்லது வல்லமை, அவர் எழுத வேண்டுமென்று விரும்பியதை, எழுதும்படி அவர் களுடைய மனங்களில் கிரியை செய்தது, என்றாலும்

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Leon Snyder. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com




அவர்களுடைய எழுத்துக்களில் மறைக்கப்பட்டிருந்த ஆழமான காரியங்களை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இதனை அவர்கள் தாமே சில சமயங்களில் சுட்டிக்காட்டியுள்ளனர். உ.ம்.- எசே. 20 : 49 "**அப்பொழுது நான்: ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இவன் உவமைகளையல்லவோ சொல்லுகிறான் என்று அவர்கள் என்னைக் குறித்துச் சொல்லுகிறார்கள் என்றேன்.**" மேலும், தானியேலில் (தானி. 8 : 26, 27) சொல்லப்பட்ட இராப்பகல்களின் தரிசனங்கள் சத்தியமாயிருக்கிறது. இன்னும் அநேக நாட்கள் செல்லும் என்றும் நாம் வாசிக்கிறோம். அப்போஸ்தலன் பவுல் இந்த பழைய ஏற்பாட்டு எழுத்துக்களில் சிலவற்றை விவரித்து, "**இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது: உலகத்தின்** (கிரேக்க பாஷையில் பன்மையில் - "யுகங்கள்" என்று உள்ளது) **முடிவு காலத்தி லுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டுமிருக்கிறது**" (1 கொரி. 10 : 11) என்று கூறுகிறார். அவை முடிவு அல்லது யூத யுக அறுவடைக்காலத்தையும், முடிவு காலம் அல்லது சுவிசேஷ யுக அறுவடை காலத்தை (மத். 13 : 39) குறிப்பிடுகின்றன. அந்த வேலை இந்நாள்வரைக்கும் தொடர்கிறது. மேலும் "**தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவை களெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது**" (ரோம. 15 : 4) என்றும் அவர் கூறுகிறார். பழைய ஏற்பாடு, சுவிசேஷ யுக பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளுக்கு மிகப்பெரிய நன்மை தருகிற மதிப்புமிக்க காரியங்களை பூட்டியும், முத்திரை போட்டும் வைத்திருக்கிறதான போற்றுதற் குரிய பொக்கிஷ வீடாக இருக்கிறது; பிரத்தியேகமாக இந்த யுகத்தின் முடிவில், அவைகளைப் புரிந்து கொள்ளப்படுவதற்கு ஏற்ற காலம் வந்திருக்கிறபடியால், புதிய ஏற்பாடு அவைகளை அடைந்து கொள்வதற்கான திறவுகோலாயிருக்கிறது. எரே. 15 : 16 சொல்கிறது, "**உம்முடைய வார்த்தைகள் கிடைத்த வுடனே அவைகளை உட்கொண்டேன்: உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது: சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது.**"

இயேசு, "**வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் ....... என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே**" (யோவா. 5 : 39) என்று சொன்னபோது அவர் வேதாகமத்தின் எந்தப் பகுதியை சுட்டிக்காட்டினார்? பழைய ஏற்பாடு என்று நாம் பதிலளிக்கிறோம். ஏனெனில் புதிய ஏற்பாட்டின் ஒரு வார்த்தைகூட அப்போது எழுதப்படவில்லை. "**தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்த**" (அப். 17 : 11) பெரோயா பட்டணத்தாரை அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுடைய மனோவாஞ்சையான கற்றுக் கொள்ளுதலைப் புகழ்ந்துரைத்தபோது, எந்த வேத வசனங் களை அவர் சுட்டிக்காட்டினார்? பழைய ஏற்பாடு தான்! இயேசு வும், ஆதி அப்போஸ்தலர்களும் எந்த வேத வாக்கியங்களை மேற்கோள் காட்டினர், "**வேத வாக்கியமும் தவறாததாயிருக்க**" (யோவா. 10 : 35) என்று இயேசு சொன்னபோது, அவர் எந்த வேத வாக்கியங்களைச் சுட்டிக்காட்டினார், பழைய ஏற்பாடுதான்! அத்துடன் உயிர்த்தெழுந்த கர்த்தர், "**ஒரு வழிப்போக்கனைப் போல**" எம்மாவூருக்குப் போன இரண்டு பேருடன் சேர்ந்து நடந்து, சம்பாஷித்துக் கொண்டு போகையிலும், "**மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேத வாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்**" (லூக். 24 : 27) அந்த வேத வாக்கியங்கள் எவை? பழைய ஏற்பாடுதான். அப்பொல்லோ "**வேதாகமங் களில் வல்லவனுமான**" வனாயிருந்தான். (அப். 18 : 24) எந்த ஏற்பாட்டில்? அப்போஸ்தலன் பவுல் யூதர்களை அவர் களுடைய தேவாலயங்களில் சந்தித்து, "**வேத வாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து**" வந்தார். (அப். 17 : 2) எந்த வேத வாக்கியங்களை அவர் பயன்படுத்தி னார்? நிச்சயமாக பழைய ஏற்பாடுதான். அகிரிப்பா ராஜாவிடம் அவர், "**தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா?**" (அப். 26 : 27) என்று கேட்டபோதும்கூட அவர் சுட்டிக்காட்டியதும் இதுவே; தீமோத்தே யுவுக்கு அவர் எழுதுகையில் "**கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ள வனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்**" (2 தீமோ. 3 : 15) என்று அவர் சுட்டிக்காட்டியதும் பழைய ஏற்பாடுதான். பவுல் இங்கே 16 ஆம் வசனத்தில் பழைய ஏற்பாட்டை உறுதியாகச் சுட்டிக்காட்டுகிறார். "**வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது, "தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகும்படியாக** வச. 17 **அவைகள் ..........பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.**"


தேவனுடைய மனுஷர் என்று சொல்லிக்கொள்ளுகிற சிலர் ஏன் எவ்வளவு குறைவான தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று நாம் கேட்கலாம். ஆம் காரணம் என்னவெனில் அவர்கள் தேவனுடைய வார்த்தையில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமானதாயிருக்கும் பழைய ஏற்பாட்டை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். பரி. பவுல் 2 தீமோ. 3 : 16-ல் பழைய ஏற்பாடு தேவனுடைய மனுஷனுக்கு பிரயோஜன மாயிருக்கிறது என்று கூறுகிறார். பேதுருவும் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனத்தை மிகவும் உயர்வாக மதிப்பிட்டு, தாம் கண்ட காட்சியை விட சிறந்த ஆதாரமாயிருப்பதாக கருதுகிறார்; "**பரிசுத்த பர்வதத்தில்**" கிறிஸ்துவின் மறுரூபமடை தலைப் பற்றி சொல்லிய பிறகு, அது கிறிஸ்துவின் ராஜ்யம் வருவதைக் குறித்த ஒரு சான்றாக கொடுக்கப்பட்டிருப்பதாக, அவர் சொல்கிறார். (2 பேது. 1 : 19), "**அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்.**" அது பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது என்ற

பரி. பவுலின் வாக்கியத்தை அவர் உறுதிப்படுத்துவதுடன், "**பொழுது விடியும் வரை**" இது தொடர்ந்து நமக்கு பிரயோஜன முள்ளதாயிருக்கும் என்று சொல்கிறார்.

சுவிசேஷ யுகத்தின் முடிவாகிய இந்நாளில் நம் மத்தியிலேயே நிறைவேறி கொண்டிருக்கிறதும், அருகிலுள்ள எதிர்காலத்தில் நிறைவேற இருக்கிறதுமான அநேக தீர்க்க தரிசனங்களால் பழைய ஏற்பாடு நிறைந்திருக்கிறது. நன்கு விழித்திருக்கிற கிறிஸ்தவர்களான, பிரதிஷ்டை செய்து விழிப்புணர்வுடனிருப்பவர்கள் "**மற்றவர்கள் தூங்குகிறது போல தூங்காமல்**"(1 தெச. 5 : 6) எழுந்து, தங்கள் விளக்குகளைத் தூண்டி (வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து) அவற்றை எரிந்து கொண்டிருக்கச் செய்வது அவசியமாயிருக்கிறது. "**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.**" (சங். 119 : 105).

பழைய ஏற்பாடு குறித்து இவ்வளவு சாட்சிகள் புதிய ஏற்பாட்டில், இருந்த போதிலும், கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் சிலர் பழைய ஏற்பாட்டு எழுத்துக்களை ஒதுக்கிவிட மனமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் பெருமளவில் அல்லது முழுமையாக தீர்க்கதரிசனத்தையும் அதன் கடந்த கால, தற்கால மற்றும் எதிர்கால நிறைவேறுதல்களையும் பற்றி அறியாமலிருக்கிறார்கள். அவைகள் "**கிறிஸ்துவின் பாடு களையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தது.**" அப்போது "**உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும், உரைத்தபடி இழந்து போனவைகளைத் திரும்பக் கொடுக்கும் காலத்தில்**" (see Eng. Bible) (அப். 3 : 21). ஆபிரகாமின் சந்ததி மூலம் பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படும். (ஆதி. 12 : 3; 22 : 18; கலா. 3 : 8, 16, 29). ஓ! சூரியனுடைய மாபெரும் வெளிச்சத்தை சந்திரன் பிரதிபலித்து, நமக்கு இரவில் வெளிச்சம் தருவது போல பழைய ஏற்பாடு கிறிஸ்தவனின் பாதையில், அதன் கோட்பாடுகள், கட்டளைகள், வாக்குத் தத்தங்கள், புத்திமதிகள், சரித்திரங்கள், தீர்க்கதரிசனங்கள் மற்றும் அடையாளங்கள் வாயிலாக அதிகமான வெளிச்சத்தைப் பொழிகிறது.

அநேக கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டைப் படிப்பதை புறக்கணிக்கிறார்கள். ஏனெனில், அவர்கள் அதன் அடை யாளங்களான, வனாந்திரத்தில் ஏற்படுத்தப்பட்ட இஸ்ரவேலின் ஆசரிப்பு கூடாரம், (ஆசரிப்புக் கூடார நிழல்கள் பார்க்கவும்)




**உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம், உம்முடைய நீதி நியாயமெல்லாம் நித்தியம். சங். 119 : 160.**

**பழைய ஏற்பாடு**

**ஐந்து ஆகமங்கள்**

**சரித்திரம் சார்ந்த புஸ்தகங்கள்**

**ஞான புஸ்தகங்கள்**

**தீர்க்கதரிசன புஸ்தகங்கள்**

மற்றும் அதனுடன் தொடர்புள்ள பலிகள் மற்றும் ஆசரிப்புகளை உணர்ந்து கொள்ளத் தவறிவிடுகிறார்கள்; இவைகள் வரப் போகிற நன்மைகளின் நிழலாக மாத்திரம் இருந்ததாக அப். பவுல் நமக்கு உறுதியளிக்கிறார். (கொலோ. 2 : 17; எபி. 8 : 5; 10 : 1). பழைய ஏற்பாட்டின் அடையாளங்களை – குறைந்த பட்சம் பகுதியளவாவது அறிந்து கொள்ள தவறுவதே காரணமாயிருக்கிறது. கிறிஸ்துவின் முதலாவது வருகையின் காலத்தில் கிறிஸ்துவின் சிலுவை அநேகருக்கு இடறுதற்கான கல்லும், பைத்தியமுமாக இருந்ததைப் போலவே, இப்போது மிருக்கிறது. "**அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும், விழுதற்கேது வான கன்மலையுமாயிற்று. அவர்கள் திருவசனத்திற்கு கீழ்ப்படியாத வர்களாயிருந்து இடறுகிறார்கள்: அதற்கென்றே நியமிக்கப்பட்டவர் களாயும் இருக்கிறார்கள்.**" (1 பேது. 2 : 8). சிலுவையின் ஊழியர்கள் என்று வெளிப்படையாக சொல்லிக் கொள்பவர் களில் அநேகர் இதன் மதிப்பை அறிந்து கொள்ளவுமில்லை அல்லது இதனை பிரசங்கிப்பதுமில்லை. அவர்களுடைய பெரும்பாலான போதனைகள், இப்பொழுது நாம் "**குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே**" (1 பேது. 1 : 18, 19). மீட்கப்பட்டிருக்கிறோம் என்பதற்கு மாறாக அதை மறுப்பதையும் பொய்யென நிரூபிப்பதையும் தங்கள் நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. இதற்கு பதிலாக மனுஷனுடைய வீழ்ச்சியையும், அதற்கு மீட்கும் பொருள் அவசியம் என்பதையும் போதிக்கிற வேதாகம உபதேசத்தை மறுதலிக்கும் பரிணாமவாதக் கொள்கையை அறிவிப்பதுடன் பாவியானவனுக்கு கிறிஸ்துவின் முக்கியத்து வம் அவருடைய வசனங்களிலும், மாதிரியிலும் மட்டுமே அடங்கி இருப்பதாக வலியுறுத்துகிறார்கள்.


இயேசுவின் மீட்கும் பொருள் பலியின் மீதான வெளிச்சம், பிரசங்க மேடையிலும், தேவாலய சாய்விருக்கை களில் அமர்ந்திருக்கிறவர்களின் மனங்களில் மங்கலாகியிருப்ப தால், பழைய ஏற்பாடும், அதிலுள்ள மோசேயின் நியாயப் பிரமாணம் மற்றும் பலிகள் அடையாளப்படுத்தும் அந்த மீட்கும்பொருள் பலியை மதிப்பு குறைந்த இடமாகிய கீழ் நிலைக்கு தள்ளப்பட்டு போயிற்று. ஒரு காலத்தில் தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்தில் அவர்கள் பார்த்த போது, இஸ்ரயேலின் பலிகள், பாவத்திற்கான "**இவைகளிலும் விசேஷித்த பலிகளின்**" (எபி. 9 : 23) சாயலானவைகளாயிருந்தன என்று அப். பவுல் கூறியதை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். கிறிஸ்தவன் என்று உரிமை கொண்டாடுகிறவன், கிறிஸ்துவின் மீட்கும் பொருள் பலியின் நிறைவேறுதலை, நிறைவேறுதலான




பாவநிவாரண பலியை எப்படி மறுக்க முடியும் என்று நாங்கள் கேட்கிறோம்? பழைய ஏற்பாட்டின் இந்த அடையாளமான பலிகள் யாவும் வேண்டாமென்று விலக்கப்பட்டும் அர்த்த மற்றவை என்று கருதப்பட்டும் இருக்கின்றன!

“பைபிள் ஸ்டாண்டர்டு” பத்திரிக்கை தேவனுடைய வார்த்தை முழுவதற்கும் – பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டையும் தாங்கி நிற்கிறது. அதில் ஏதொன்றையும் ஒதுக்கி விடுவது எங்கள் திட்டமல்ல. தேவனுடைய மனுஷன் எந்த நற்கிரியையுஞ் செய்ய முற்றிலும் தகுதியுள்ளவனாக இருக்க வேண்டும், பகுதியளவு மாத்திரம் தகுதியுள்ளவனாக அல்ல. நாம் “**நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்து வெட்கப்படவில்லை.**” (2 தீமோ. 1 : 8). “**கர்த்தருடைய வார்த்தை கற்பனையின் மேல் கற்பனையும், ……பிரமாணத்தின் மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும், அங்கே கொஞ்சமுமாக**” எழுதப்பட்டிருப்பதை (ஏசா. 28 : 10) நாம் உணர்ந்து கொள்வதுடன், அதன் சரியான தோற்றத்தையும், முழுமையான கருத்தையும் பெற்றுக்கொள்ள, நாம் எல்லாப் பகுதிகளையும் ஒன்று சேர்த்து அவற்றின் பூரண இசைவைக் காண வேண்டும். அருமை சகோதரரே, நாம் தேவனுடைய வார்த்தையின் சில பகுதிகளை மட்டும் பயன்படுத்திக் கொண்டு மற்ற பகுதிகளை ஒதுக்கிவிட்டால், சபைக்காகவும் உலகத்துக்காகவும் உள்ள தேவனுடைய மகத்தான இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றி நாமும்கூட ஒரு தவறான கருத்தையே பெற தகுதியுள்ளவர்களாயிருப்போம். (1 யோவா. 2 : 2).

தவறான கோட்பாடுகள் சுய தோற்றமான பொருள் விளக்கமும், ஏற்கனவே மனதில் புகுத்தப்பட்ட எண்ணங்கள், மற்றும் அரைகுறையான புரிந்து கொள்ளுதல்கள் ஆகியவற்றின் மீது கட்டப்படுகின்றன. நாம் “உபதேசத்தைக்” குறித்து “எச்சரிக்கையாயிருக்க” வேண்டும். (1 தீமோ. 4 : 16). “**தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை.**” (2 பேது. 1 : 21). ஆகையால் நம்முடைய கொள்கை, தேவனுடைய வார்த்தை முழுவதையும் கவனத்தில் கொண்டுவர வேண்டும் என்பதே. அதனுடன் எதையும் கூட்டவோ, அதிலிருந்து எதையும் எடுக்கவோ (or நீக்கவோ) கூடாது, ஆனால் அதைக் கவனமாய் படிக்க வேண்டும், “**வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் நம்மை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படியாக ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.**” (2 தீமோ. 2 : 15). நம்முடைய வாசகர்கள் எங்களோடுகூட சேர்ந்து இந்த முடிவுக்கு வரும்படியாக ஒத்துழைக்க அழைக்கிறோம்; அத்துடன் நாம் நம்முடைய எல்லா காரியங்களிலும் அவருடைய பரிசுத்த சித்தத்தை கற்று அறிந்து கொள்ளவும், நிறைவேற்றவும் நாடுகிறபடியால் நம்மெல்லாரையும் தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக!




**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். யோவா. 17 : 17.**

# ஜலத்தினால் ஞானஸ்நானம்

*(Water Baptism)*

**பெறுவது உங்களுடைய சித்தத்தைத் தேவனுடைய சித்தத்தை செய்வதற்காக விட்டுவிடுவதை அடையாளப்படுத்துகிறது.**

## நித்திய வேதனை

நித்திய நரக உபதேசங்கள் படிப்படியாக வளர்ந்தது என்று திருச்சபை வரலாறு காட்டுகிறது. ஆதாமின் ஒவ்வொரு பிள்ளையும் நரக அக்கினியினால் பாதிக்கப்படாத பிசாசுகளின் கைகளில் நித்திய நரக வேதனை அனுபவிக்கவே பிறந்திருக்கின்றனர், அதனால், அதிலிருந்து தப்பித்துக்கொள்ள ஞானஸ்நானம் ஒன்றே வழி என்ற கொள்கை முதலாவது வந்தது. ஆனால் ஞானஸ்நானம் முந்தின பாவங்களை மட்டுமே ரத்து செய்ததே ஒழிய தொடர்ந்து வருகிற பாவங்களையல்ல என்று வலியுறுத்தப்பட்டது; கான்ஸ்டன்டைன் காலத்தில், மரண நேரம் நெருங்கிவரும் சமயம் வரும்வரை ஞானஸ்நானத்தை தள்ளிப்போடுவது வழக்கமாயிருந்தது. டெர்துல்லியன் இந்த கருத்தை ஆதரித்தார். பின்பு, வந்த

**ஒருவரும் தேவனுக்கு முக்கியமில்லாதவர்கள் அல்ல**


**இயேசு சிறுபிள்ளைகளில் களிகூர்ந்து, ஒவ்வொருவருக்கான தேவனுடைய அன்பு எவ்வளவு பெரியது என்பதை எடுத்துக்காட்டினார்! அவர் ஒவ்வொரு நபரிடமும் தனிப்பட்ட முறையில், சிறப்பான விதத்தில் சேர்த்து அவர்களைத் தமது குணமாக்குகிற அன்பு மற்றும் வல்லமையால் தொடுவார்.**

பரி. அகஸ்டின் அந்த கொள்கையை இன்னும் மேம்படுத்தி, சபை மட்டுமே இரட்சிக்கப்படும் என்றும், ஞானஸ்நானம் என்பது திருச்சபைக்குள் சேர்க்கும் நோக்கத்திற்காகவே என்று சொன்னார்.

## குழந்தை ஞானஸ்நானம்

இயல்பாகவே, குழந்தைகள் திருச்சபைக்குள் சேர்க்கப் படாமலே மரித்துவிட்டார்களானால், அவர்கள் நித்திய வேதனைக்கு சென்று விடுவார்கள் என்ற நம்பிக்கை நிலவி வந்தது. இந்த போதனையின் விளைவாக, குழந்தை ஞானஸ்நானம் மிகவும் பிரசித்திபெற்ற ஒன்றாக எழும்பி, இப்போதும் நடைமுறையிலிருக்கிறது. முதலாவது, குழந்தை கள் தண்ணீரில் மூழ்கும்படி செய்யப்பட்டனர். ஆனால் பின்பு, எல்லா பிஷப்புகளும் அப்போஸ்தலர்களின் வாரிசுகள், அதிகாரத்தில் சமமானவர்கள் என்ற நம்பிக்கையின் கீழ் சபை ஆட்சி மன்றக் குழுக்கள் தேவனுடைய வசனத்தின் இடத்தை எடுத்துக் கொண்டன. அவைகள் வேத புத்தகத்தில் சொல்லப்பட்டிராத குழந்தை ஞானஸ்நானத்துக்கு அங்கீகாரம் வழங்கியது மட்டுமல்லாமல், தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பது அவசியமல்ல என்றும், சில துளி தண்ணீர்கள் வயதானவர்களை அல்லது சிறு குழந்தைகளை சபைக்குள் சேர்த்துவிடும் என்றும், அது நித்திய நரக வேதனைக்கு எதிராக ஒரு காப்புறுதியை உண்டாக்குகிறது என்றும் அறிவித்தனர். இந்த கோட்பாடு அநேகர் கற்பனை செய்வதைக் காட்டிலும், அதிக அளவுக்கு இன்னும் நிலைத்திருக்கிறது. "ஆ! நாங்கள் சிறு குழந்தைகளுக்கு தெளிப்பு ஞானஸ்நானத்தை நடை முறைப்படுத்துகிறோம். ஆனால் அது "கிறிஸ்தவ மதத்தில் சேர்ப்பது" மட்டுமே, எதுவானாலும் கிருபை நிறைந்த பரம பிதாவோ அல்லது அவருக்குப் பிரியமான குமாரனாகிய நமது மீட்பரோ, – ஒரு சிறு குழந்தையை அது கிறிஸ்தவனாகாமலே மரித்தாலும் கூட அதை நரக வேதனைக்கு அனுப்பி வைப்பார்களென்ற எண்ணம் எதுவும் எங்களுக்கு இல்லை." என்று சிலர் கூறுகிறார்கள். மூடநம்பிக்கைகள் நிலைத்திருக்கும் என்று அதிக நிச்சயத்துடன் இருக்க வேண்டாம். எபிஸ் கோப்பல் திருச்சபையில் நரை முடியுள்ள பிஷப் ஒருவர், அவருடைய பேரக் குழந்தையொன்று, "கிறிஸ்தவ மதத்தில் சேர்க்காமலே இயேசுவின் கரங்களில் பத்திரமாக இருக்கும் என்று அபிப்பிராயம் சொல்லி எல்லோரையும் திகைக்க வைத்தது நமக்கு தெரியும். ஆனால் அது மாத்திரமல்ல, இந்த இருண்ட நாளின் மூட நம்பிக்கைகள் சில மதக்குருக்களால் ஜனங்கள் மீது மிகுந்த வலிமையுடன் பதியச் செய்யப்படுகிறது.

கிறிஸ்தவ சீஷர்கள் என்ற சபைப் பிரிவு ஸ்தாபனத்தால் பின்பற்றப்பட்டு வரும் முழுக்கு ஞானஸ்நானம் எடுத்தல் பற்றிய உபதேசத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, இந்த சபைப் பிரிவைச் சேர்ந்த ஜனங்களில் எவரையும் பற்றியும் ஒரு அன்பில்லாத வார்த்தையும் நாங்கள் சொல்ல மாட்டோம். ஆயினும் அவர்களுடைய உபதேசங்கள் முற்றிலும் முரண் பாடுள்ளது. அவர்கள் பின்பற்றும் இந்த முழுக்கு ஞானஸ் நானம் எடுத்தல் உபதேசத்தில், ஞானஸ்நானம் என்பது பாவங்களை மன்னிக்கிறது என்பதை நிரூபிப்பதற்காக அநேக பாடங்கள் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருப்பதாக எடுத்துக் காட்டுகின்றனர். அப்பாடங்கள் வேதாகமத்தில் கொடுக்கப் பட்டபடி யூதர்களைத் தவிர வேறெவருக்கும் பொருந்தும் நோக்கத்தில் கொடுக்கப்படவில்லை, ஏனெனில் யூதர்கள் மட்டுமே செல்லுபடியாகக்கூடிய பாவங்கள் மன்னிக்கப் படுவதற்கான ஞானஸ்நானத்தை பெற்றனர்; வேறு எவரும் அல்ல. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மூலமாக யூதர்கள், தேவனுடன் உடன்படிக்கை உறவில் இருந்தனர். அவர்கள் பாவத்துக்குள்ளாகி விட்டபோது, மனஸ்தாபப்பட்டு தேவனிடம் திரும்புவதும் பாவத்திலிருந்து திரும்பி வருவதை சுட்டிக்காட்ட தண்ணீரை அடையாளமாக பயன்படுத்துவதும் அவர்களுக்கு தகுதியானதாயிருந்தது. இயேசுவின் நாளில் நியாயப் பிரமாண உடன்படிக்கையுடன் பூரண இசைவிலிருக்கிற எல்லா யூதர்களும் மோசேயிலிருந்து கிறிஸ்துவுக்கு மாற்றப்பட்டனர்.


"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்..." மத். 19 : 14.

விசேஷித்த பாவங்களைச் செய்தவர்கள் மட்டுமே அந்த பாவங்களை அடையாளப் பூர்வமாக தண்ணீரில் சுத்திகரித்துக் கொள்ள அழைக்கப்பட்டனர். "உத்தம இஸ்ரவேலர்களைப் போல" உறுதியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த மற்றவர்கள் ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ளவோ அல்லது தங்கள் பாவங்களை கழுவிச் சுத்திகரிக்கவோ ஒருபோதும் அறிவுறுத்தப்படவில்லை. அப்போஸ்தலர்கள் மத்தியிலும் பரி. பவுலைத் தவிர வேறு எவருமே தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக தண்ணீரில் மூழ்கி எழும்பியதாக எந்த பதிவுகளும் இல்லை, அவர் மட்டுமே கிறிஸ்துவின் சபையை துன்புறுத்தியதால் பாவ மன்னிப்புக்கான ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டார். மனந்திரும்பின புறஜாதியாருக்கு சொல்லப்பட்டிருக்கிற, கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நான மானது, யூத மக்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக எடுத்த ஞானஸ்நானத்திலிருந்து முற்றிலும் வித்தியாசமானது. அப். 18 : 24, 25-ல் இதற்கான விளக்கம் காணப்படுகிறது. அங்கே பாவ மன்னிப்புக்காக எபேசுவிலிருந்த குறிப்பிட்ட புறஜாதியாருக்கு அப்பொல்லோ என்பவர் யோவானின் ஞானஸ்நானத்தைக் கொடுத்திருந்தார். பரி. பவுல் அதன்பின்பு இதனை தவறென்று அறிவித்து அவர்கள் மீண்டும் முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கும்படி செய்தார். பாவங்கள் மன்னிக்கப் படுவதற்காக அல்ல, ஆனால் சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்துக்குள்ளாக அடையாளமாக சேர்த்துக் கொள்ளப் படுவதற்காக ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. (அப். 19 : 1-6). மேலும், கொர்நேலியுவும், அவருடன்கூட மற்றவர்களும் முழுக்கு ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன்பாகவே அவர்கள் பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டார்கள், இது அவர்களுடைய பாவங்கள் முன்னதாகவே மன்னிக்கப் பட்டுவிட்டதை நிரூபிக்கின்றது, ஏனெனில், ஒருவன் பரிசுத்தா வியைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பாக அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்க வேண்டும். (அப். 10 : 44-48; 2 : 38). ஞானஸ்நானம் என்பது பாவங்கள் மன்னிக்கப் படுவதற்காக என்பதான, கிறிஸ்தவ – சீஷர்கள் சபைப் பிரிவின் கொள்கைக்கு எதிராக நாம் முன்வைக்கிற பிரதான கருத்து என்னவெனில் இயல்பாகவே இது ஞானஸ்நானம் எடுக்காத எல்லா கிறிஸ்தவர்களையும் ஐக்கியத்திலிருந்து விலக்கி விடுகிறது. இந்த கொள்கையின் நியாயம் கிறிஸ்தவ சீஷர் சபைப் பிரிவு ஸ்தாபனத்தில் சில ஆதரவாளர்களைக் கண்டு கொள்ளும். இந்த கொள்கையின் நியாயம் பின்வருமாறு விளக்கப்படுகிறது: முழுக்கு ஞானஸ்நானம் எடுத்தல் வயதில் பெரியவர்களுக்கு தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக அல்லது கழுவப்படும்படியாக அவசியப்படுகிறதென்றால், முழுக்கு ஞானஸ்நானம் எடுக்காத பெரியவர்கள் எல்லாரும்




இப்போதும் தங்கள் பாவங்களில் மன்னிக்கப்படாமல் இருக்கிறார்கள் என்பதைத் தொடர்ந்து குறிப்பிடுவதாயிருக்கும். இந்த கொள்கையின்படி, அவர்கள் மரிப்பார்களானால், அவர்கள் தங்கள் பாவங்களின் தண்டனையை அனுபவித்தாக வேண்டும், அந்த தண்டனை அவர்கள் சொல்கிறபடி நித்திய வேதனை என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

## ஜலத்தினால் ஞானஸ்நானம்

முக்கியமான சபைகள் பின்பற்றி வரும் எந்த ஞானஸ்நானக் கொள்கையைக் காட்டிலும் பேப்டிஸ்ட் சபையின் கொள்கை வேத வாக்கியங்களுடன் மிக அதிக அளவில் நெருங்கி இருப்பதாக நாங்கள் பாராட்டுகிறோம். ஆயினும் இக்காலத்தில் சோதனைக்குட்படுத்தப்பட்டால் குறிப் பிடத்தக்க பேப்டிஸ்ட்டுகள் ஒரு சிலரே தங்கள் கொள்கையில் நிற்கமுடியும் அல்லது நின்று காட்ட முடியும். இருந்தபோதிலும், கொள்கையிலும், நடைமுறையிலும், பெரும் திரளான பேப்டிஸ்ட் சபையினர் பரலோகத்தில் பெயரெழுதப்பட்டிருக்கிற “ஜீவனுள்ள தேவனுடைய சபையில் சேர்த்துக் கொள்ளப் படுவதற்கு முழுக்கு ஞானஸ்நானம் அத்தியாவசியமான ஒரு நிகழ்வாக இருக்கிறது என்று அறிவிக்கின்றனர். இதை முழுவதுமாக பின்பற்றும் விதமாக, உலகம் முழுவதிலும் பத்தில் ஒன்பது பேப்டிஸ்ட் சபைகளில், முழுக்கு ஞானஸ்நானம் எடுத்தவர்கள் மட்டுமே, கர்த்தருடைய இராப்போஜனத்தில் கலந்து கொள்ள விருந்து மேசைக்கு அழைக்கப்படுகிறார்கள். இது ஏன்? ஏனெனில் முழுக்கு ஞானஸ்நானம் எடுத்தவர்கள் மட்டுமே மெய்யான சபையைச் சேர்ந்தவர்கள் என்றும், இராப்போஜன விருந்து பிரத்தியேகமாக சபைக்குரியது என்றும் அவர்கள் அறிவிக்கிறார்கள். திருச்சபையில் அங்கத்தின ராவதால் என்ன நன்மைகள் கிடைக்கும் என்று நாம் அவர்களைக் கேட்டோமானால், அவர்கள் பதில் இரட்சிப்பு! என்பதாகும். இரட்சிப்புக்கு எதிர்மறையானது அல்லது இரட்சிப்புக்கு எதிரானது என்ன? என்று நாம் கேட்கிறோம். அவர்களுடைய பதில் – இழப்பு. இழப்பு என்றால் என்ன? நாம் விசாரிக்கிறோம். அதற்கு பதில், தேவனிடமிருந்து நீக்கப்பட்டு, நித்திய வேதனையை அனுபவிப்பது என்கின்றனர். ஆகவே, கொள்கை ரீதியாக, பின்பு நம்முடைய பேப்டிஸ்ட் சபை நண்பர்களும் முழுக்கு ஞானஸ்நானம் எடுக்காதவர்களுக்கு கிறிஸ்தவ சீடர்கள் சபையினர் கைமாற்றிக் கொடுத்த இதே இரத்தத்தை உறைய வைக்கும் கொள்கையை அதாவது, கத்தோலிக்கர்கள், லுத்தரன்கள், பிரஸ்பிடேரியன்கள், மெத்தடிஸ்ட்கள், காங்க்ரிகேஷனலிஸ்ட் போன்ற சபைப் பிரிவினர்கள் அந்த நித்திய வேதனைக்கே போய் கொண்டு இருக்கிறார்கள் என்று அறிவிக்கிறார்கள்.

## கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுதல்

பரி. பவுல், “தேவன் காணாதவர் போலிருந்த” அல்லது கண்டுகொள்ளாமலிருந்த அறியாமையின் காலங்கள் சிலவற்றைக் குறித்து நமக்குச் சொல்கிறார். சர்வ வல்லவர் தம்முடைய பிள்ளைகளில் சிலருடைய கொள்கைகளில் காணப்பட்ட இப்படிப்பட்ட முரண்பாடுகளை இரக்கத்துடன் மன்னித்து, தேவனுடைய குணாதிசயத்தை இவ்வளவு பயங் கரமாக பழித்து கூறி, தேவனுடைய வசனத்தை தவறாக அறிவித்த பொறுப்பை அவர்கள் மீது சுமத்தி குற்றப்படுத்த வில்லை என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் இப்பொழுது நம்முடைய அறிவின் கண்களை தேவன் திறந்து கொண்டிருக் கிறார். அப்படிப்பட்ட பயங்கரமான கொள்கைகளை எவரும் நம்புவதற்கு இப்போது எந்த காரணமும் கிடையாது. அவைகளை இருதயத்தால் ஏற்றுக்கொள்ள மறுத்த பிறகு, இன்னும் அவைகளை நம்பும்படி அறிக்கை செய்ய அவர் களுக்கு எந்த காரணமும் இல்லை. ஞானஸ்நானத்தைப் பற்றிய உண்மையான கருத்து, முரண்பாட்டிற்குட்பட முடியாத ஒன்று ஆகும். அது தன்னில் தானேயும் வேதாகமத்தின் ஒவ்வொரு வாக்கியத்துடனும் ஒத்துப்போகிறதாயிருக்கிறது. இது ஒவ்வொரு சபைப்பிரிவிலுள்ள அல்லது ஒவ்வொரு சபைப்பிரிவு களுக்கும் வெளியே இருக்கிற பிரதிஷ்டை செய்திருக்கிற தேவனுடைய பிள்ளைகளையும் ஏற்றுக் கொள்கிறது. பரிசுத்த மான பேப்டிஸ்ட், பரிசுத்தமான சீஷர், பரிசுத்தமான கத்தோலிக்கர், எபிஸ்கோபலியன், லுத்தரன், காங்ரிகேஷன லிஸ்ட், மெத்தடிஸ்ட் போன்றவர்களை பரலோகத்தில் பெய ரெழுதப்பட்ட ஜீவனுள்ள தேவனுடைய ஒரே சபையின்” அங்கத்தினர்களாக்குகிறது. இது எப்படிப்பட்ட ஞானஸ்நான மாய் இருக்க வேண்டும்? எங்கள் பதில்: இது பரி. பவுலினால் ஒரு பாடத்தில் சுட்டிக்காட்டியுள்ள ஒன்று; அதை நாம் எல்லோரும் படித்திருக்கிறோம். அதை அடிக்கடி சுட்டிக் காட்டியிருக்கிறோம்: “***கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிறதை அறியாமலிருக்கிறீர்களா?***” (ரோம. 6 : 3). கடந்த காலத்தில் நாம் எல்லோரும் செய்த தவறு, அப்போஸ்தலனுடைய இந்த வார்த்தைகளை தண்ணீரினால் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு பொருத்திப் பார்த்ததுதான். அப்போஸ்தலன் தண்ணீரினால் ஞானஸ்நானம் எடுப்பதைப் பற்றி ஒரு வார்த்தைகூட பேசவில்லை; ஆனால் கிறிஸ்துவுக் குள்ளான ஞானஸ்நானம், கிறிஸ்துவின் “சரீரமாகிய சபைக் குள்ளான ஞானஸ்நானத்தை பற்றி குறிப்பிட்டுக் காட்டி யுள்ளார். சுவிசேஷ யுகத்தின்போது தெரிந்துகொள்ளப்பட்ட சபை கூட்டிச் சேர்க்கப்படுதலை தேவன் திட்டம் பண்ணி யிருக்கிறார் என்பது இதன் கருத்தாயிருக்கிறது. இந்த சபையின் தலையானவர் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு மகிமைக்குள்ளாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அத்துடன் பெந்தெகொஸ்தே முதல் இயேசுவின் மெய்யான அடிச்சு வட்டைப் பின்தொடர்ந்து வந்த ஒவ்வொருவரும் அவருடைய புண்ணியத்தின் மூலமாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு சபையாகிய “கிறிஸ்துவின் சரீர அவயவங்களாக” எண்ணப் பட்டார்கள். ஆனால், இந்த மகிமையான உயர்த்துதலை தவறவிட்ட உலகத்தார் இந்த காரணத்தின் பொருட்டு நித்திய வேதனையை அடைகிறார்கள் என்று சொல்லுகிற வேத வசனம் ஒன்றுகூட இல்லை. ஆயினும் அவர்கள் மதிப்புமிக்க வெகு மதியை இழந்துவிடுவார்கள். மெய்யான சபைக்குள் செல்வதற்கு ஜலத்தினால் ஞானஸ்நானம் வாசலாக இருக்கவில்லை. நம்முடைய பேப்டிஸ்ட் நண்பர்கள் மேற் சொன்னவற்றை ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள், ஆம் இதைத்தான் நாங்கள் அர்த்தப்படுத்துகிறோம். கிறிஸ்துவுக்குள்ளிருப்பதற்காக மட்டுமே, பேப்டிஸ்ட்களாகிய நாங்கள் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் அவசியமாயிருக்கிறது என்று அறிவிக்கிறோம்

என்று சொல்வார்கள். அவர்களுடைய எளிய தெளிவான வாக்கியங்களுக்காகவும், அவைகள் சரியாக இசைவிணக்கமாக இருப்பதற்காகவும் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அது பேப்டிஸ்ட்களின் தவறாயிருக்கிறது. அதாவது தண்ணீர் ஞானஸ்நானம் யாரையாவது மெய்யான சபைக்குள் அங்கங்களாக்குகிறது என்று நினைத்துக் கொண்டது அவர் களுடைய தவறு. ஆனால் "**அவருடைய மரணத்துக்குள்ளான ஞானஸ்நானம்**" என்கிற இந்த வார்த்தைகளின் அர்த்தம் என்ன? என்ற கேள்வி எழுகிறது. அவருடைய மரணம் எந்த வகையிலாவது மற்றவர்களுடைய மரணத்திலிருந்து வேறு பட்டிருக்கிறதா? மிகவும் நிச்சயமாக அப்படித்தான் இருந்தது! நம்முடைய இனம் பாவிகளாக கோபாக்கினையின் பிள்ளை களாக தெய்வீக மரண தண்டனையின் கீழ் மரிக்கிறது. ஆனால் இயேசு ஒரு பாவியாக இருக்கவில்லை, தேவனுடைய மரணாக்கினைத் தீர்ப்பின் கீழும் இருக்கவில்லை. அவர் "**பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும்**" ஆதாமின் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்ட வராயுமிருந்தார். அவருடைய மரணம் தியாக பலியாக – பழுதில்லாத ஒரு ஜீவனை ஒப்புக்கொடுத்ததாக இருக்கிறது. ஆகையால், யாரெல்லாம் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறவராய் மாறி, அவரது மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறார்களோ, அவர்கள் அவருடன்கூட பலித்தியாக மரணத்தில் பங்கெடுக்க வேண்டும். அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறவர்கள் இயேசுவின் புண்ணி யத்தின் மூலமாக சுத்திகரிக்கப்பட்டு பிரியமான பலிகளாக்கப் பட்டாலொழிய இது கூடாத காரியமாக இருக்கும் என்று வேத வாக்கியங்கள் விளக்கிக் காட்டுகின்றன, ஏனெனில், "**சுபாவத்தி னாலே நாமும் மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.**" நம்முடைய கர்த்தருடைய ஞானஸ் நானத்தின் உண்மையான அர்த்தம் மரணமாயிருந்தது. இயேசு ஒரு பாவியல்ல என்பதை யோவான்ஸ்நானகன் அறிந்திருந்தார், கழுவப்பட வேண்டியதான பாவங்கள் அவரிடத்தில் இல்லை என்பதை அறிந்திருந்ததால் முதலில் அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்க மறுத்தார். இயேசு அவருக்கு, அது சரியானது தான் என்றும் அந்த விஷயம் ஆழமான முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் உறுதியளித்த பின்பு மட்டுமே அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். "**இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது ஏற்றதாயிருக்கிறது**" என்றார். எல்லா நீதியும் என்பது நியாயப்பிரமாணம் கேட்கிற அனைத்துமாகும். அவைகள் அதற்கு கீழ்ப்பட்டிருப்பவர்கள் அனைவரின் கீழ்ப்படிதலும் அதற்கு கீழ்ப்படியாதவர்கள் எல்லாருக்கும் மரணமும் என்பதாகும். நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்ததின் மூலமாகவும், கீழ்ப்படியாத வர்களின் மரணத்திற்காக கொடுக்கப்பட வேண்டியதை திருப்தி செய்வதற்காக மரித்ததின் மூலமாகவும் இயேசு எல்லா நீதியையும் நிறைவேற்றினார். இந்த இரண்டு காரியங்களையும் அவர் அடையாளப்படுத்தினார்: (1) தண்ணீருக்குள் அவர் மூழ்கியதின் (அடக்கம் பண்ணப்பட்டதின்) மூலமாக அவருடைய மரணத்தையும், (2) தண்ணீரிலிருந்து அவர் எழுந்ததின் மூலமாக புதிதான ஜீவனுக்குள்ளாக அவர் எழும்பியதில் அவருடைய கீழ்ப்படிதலையும் ஞானஸ்நானம் மூலம் அடையாளப்படுத்தி முன் குறிப்பிட்ட எல்லா நீதியையும் நிறைவேற்றினார்.

நம்முடைய கர்த்தர், மூன்றரை ஆண்டுகளாக தாம் யோர்தானில் அடையாளப்படுத்திய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தை, – அந்த பிரதிஷ்டையின் பொருத்தனையை – நிறைவேற்றிக் கொண்டு வந்தார். நாளுக்கு நாள் அவர் அதிக ஆழமாக மரணத்திற்குள்ளாக மூழ்கடிக்கப்பட்டார். அந்த மெய்யான மரணத்திற்குள்ளான மூழ்குதல் கல்வாரியில் முடிவடைந்தது. இதற்கு இசைவாக, தமது மரணத்துக்கு சற்றே முன்பாக இயேசு, "**நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானமுண்டு அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்**" என்று சொன்னார். "எல்லாம் முடிந்தது!" என்று சொல்லிய கொஞ்ச நேரத்தில் அது நிறைவேறி முடிந்தது. அவருடைய மரணத்திற் குள்ளான ஞானஸ்நானம் முடிவடைந்தது. இதே கருத்தைத் தான் எஜமானரும் தம்மைப் பின்பற்றினவர்களுக்கும், ராஜ்யத்தில் அவருடைய வலது பாரிசத்திலும், இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்க விரும்பிய இருவருக்கும் தெரிவித்தார், "**நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை!**" ராஜ்யத்தின் மேன்மையை பெற்றுக் கொள்ள அவசியமானது என்ன என்பதை நீங்கள் அறியவில்லை. துயரம், சுயவெறுப்பு போன்றவை நிரம்பிய நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்க விரும்புகிறீர்களா? "**நான் பெறும் ஸ்நானத்தை, நீங்கள் பெறவும்**" அதாவது மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தை பெற நீங்களும் விரும்புகிறீர்களா? உங்களால் கூடுமா? என்று கேட்டார். சீஷர்கள் தங்களுக்கு விருப்பமென்று பதிலளித்தபோது, எஜமானர் மற்றவைகளைத் தாம் கவனித்துக் கொள்வதாக அவர்களுக்கு உறுதியளித்தார். சீஷத்துவத்திற்கான நிபந்த னைகள் மாறவில்லை.

> **பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான ஞானஸ்நானம், வேதாகமத்தில் கொடுக்கப்பட்டபடி, யூதர்கள் மட்டுமே பாவங்கள் மன்னிக்கப் படுவதற்காக எப்போதும் நியாயப்படி ஞானஸ்நானம் எடுத்தனர். யூதர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மூலம் தேவனுடன் உடன்படிக்கையின் உறவில் இருந்தனர்.**

## ஜலத்தினால் ஞானஸ்நானம் எதைக் குறிக்கவில்லை

ஜலத்தினால் ஞானஸ்நானம் பற்றி மேலும் ஒரு விஷயத்தைப் பார்ப்போம். அது நித்திய வேதனையிலிருந்து எவரையும் காத்துக் கொள்வதில்லை; அவர்களை நித்திய மகிமைக்குள்ளாக கொண்டு செல்வதுமில்லை; ஆனால் ஒரு அடையாளமாக ஒரு செயலின் அழகான படமாக அதனுடைய இடத்தில் இருக்கிறது. அது, பிரதிஷ்டை செய்த ஒருவன் மீட்பரிடம் மரணபரியந்தம் உண்மையாக நடக்க பொருத்தனை செய்து கொண்டதற்கு விசுவாசிகள் எல்லாருக்கும் முன்பாக ஓர் சாட்சியாயிருக்கிறது. தேவனுடைய ராஜ்யத்தில் நித்திய ஜீவனை அடையும்படி, அவருடைய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு, தங்களுடையவைகளெல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்து, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடக்க முயற்சி செய்கிறவர் களுக்கு, அப்படிப்பட்ட பிரதிஷ்டையை அவ்வாறு அறிக்கை செய்வதற்காக, பிரதிஷ்டை செய்த எல்லாருக்கும் தண்ணீரினால் ஞானஸ்நானம் பெறுவது, சித்திரம் போன்ற அறிக்கையாக, கர்த்தருடைய சொந்த ஏற்பாடாக இருக்கிறதென்று நாங்கள் பரிந்துரைக்கிறோம். (ரோம. 6 : 3–5; கலா. 3 : 28; பிலி. 3 : 10). பிரதிஷ்டை செய்யாத உலகத்தாரைப் பொருத்தமட்டில், அவர்கள் ஞானஸ்நானம் பெறாமலிருப்பதே பொருத்தமான தாயிருக்கிறது. ஞானஸ்நானம் முழுமையாக பிரதிஷ்டை செய்தவர்களுக்காகவும், கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்த மாக்கப்பட்டவர்களுக்காகவுமே தவிர, வேறு எவருக்கும் ஒருபோதும் ஏற்படுத்தப்படவில்லை. தேவனுடைய ஏற்ற வேளை வரும்போது உலக மனுக்குலத்தார் தங்களுக்காக

ஏற்படுத்தப்பட்ட ஆசீர்வாதங்களை மீட்பருடைய புண்ணியத்தின் மூலமாக, அந்த மீட்பருடைய பரலோக ராஜ்யத்தின் கிருபை மிகுந்த ஏற்பாடுகளின் கீழாகப் பெற்றுக் கொள்வார்கள், அந்த ராஜ்யமானது பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் மனுக்குலத்தாரை விருப்பமுள்ள எவரையும் உயர்த்தும் நோக்கத்திற்காக வானத்தின் கீழெங்கும் ஸ்தாபிக்கப்படும்.

இயற்கையின் கிரியைகள் நன்மையானதாயிருக்க, மரணமும்
இயற்கையின் கிரியையாயிருக்க மரிப்பதற்கு ஏன் அஞ்ச வேண்டும்.
பயம் வீணானதாயிருக்க, ஆனால் அது பாதுகாப்பதாயிருக்கும் போது
நாம் கடந்து போக முடியாததைப் பற்றி நாம் ஏன் அஞ்ச வேண்டும்?
பயமுறுத்தும் வேதனையை விட பயமானது அதிக வேதனையானது,
மனித மனங்களிலிருந்து இயற்கையின் வல்லமையை நீக்குகிறது;
அதே சமயம் ஒவ்வொரு வீண் எணண்ணமும்
கோரமான உருவமொன்றை பெற்றிருக்கிறது,
அவை தீமையல்ல, பகுத்தாராயும் வெளிச்சத்தில் நன்றாக நோக்கப்பட்டவை.
நம்முடைய கண்கள் மட்டும், உணர்ச்சிகளால் மங்கலாகிவிட்டது,
அவை தெளிவடையட்டும், இப்போது காணத்துவங்கட்டும்
நம்முடைய ஜீவியம் தூசி நிறைந்த பாதையில் ஒரு அடியாக இருக்கிறது,
சமாதானம் நிறைந்த மனதின் ஆசீர்வாதத்தை நாம் பற்றிக் கொள்வோமாக;
நாம் இதை உணர்வதால், நாம் மிகப் பெரிய நஷ்டத்தைக் காண முடியாது. ***




# இஸ்ரயேலின் புது உடன்படிக்கை

*Israel's New Covenant*

***இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். (எரே. 31 : 31–34)***

***நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்: இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? (மல்கி. 3 : 1–5)***


ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தேவன் தம்முடைய கீழ்ப்படியாத பிள்ளைகளை நீதியான மரணத்துக்கு தீர்ப்பளிக்கும்போது, முடிவாக ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்று குறிப்பிட்டார். மறைக்கப்பட்டிருந்த இந்த தீர்க்கதரிசனம், உலகத்தோற்றத்திற்கு முன்பே நம்முடைய கிருபையுள்ள சிருஷ்டிகர் தமக்குள்ளே தீர்மானித்திருந்த தெய்வீக இரக்கத்தின் முதலாவது செய்தியாக இருந்தது. என்றென்றும் சிறந்தவரும் அன்பானவரும், இரக்கமுள்ளவருமான நம்முடைய சிருஷ்டிகர் தம்முடைய சிருஷ்டிகளின் நன்மைக்காக தமது இரக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டார். அதனால் அவர்கள் பாவத்தின் மிகுதியான அகோரத்தைப் புரிந்து உணர்ந்து கொள்ளும்படி செய்தார். மேலும், தேவ தூதர்களுடைய நன்மைக்காகவும் அவர்கள் அவருடைய நீதியையும், அதைப் போலவே அவருடைய ஞானம் மற்றும் வல்லமையை முழுமையாக உணர்ந்து கொள்ளும் பொருட்டு தேவன் துல்லியமான நீதியின் நோக்கிலிருந்து தம்முடைய சிருஷ்டிகள் மீது நடவடிக்கை மேற்கொள்வதை வலியுறுத்தினார். அவர்கள் பாவஞ்செய்தபடியால், அதன் விளைவாக, அவர் அவர்களுக்கு நிபந்தனையின் பேரில் கொடுத்திருந்த, நித்திய ஜீவன் மீதான உரிமை முழுவதையும் பறிகொடுத்து விட்டனர். நாம் ஏற்கனவே பார்த்தபடி, நித்திய நரக வேதனை எந்த விதத்திலும் அல்லது எந்த அளவிலும் தேவனுடைய திட்டதில் நுழைந்திடவில்லை. மனிதன் மீதான அவருடைய ஆக்கினைத் தீர்ப்பு "**நீ சாகவே சாவாய்,**" என்று தெளிவாகச் சொல்லப்பட்டது. நித்திய வேதனையில் நீ ஜீவிக்கவே ஜீவிப்பாய் என்றல்ல. "**பாவஞ் செய்கிற ஆத்துமா சாகும்.**" (ஆதி. 2 : 17; எசே. 18 : 4). தேவன் தம்முடைய மனுக்குலத்துடனான நடவடிக்கைகளில், முடிவாக எவ்விடங்களிலும் நடைமுறையில் இருக்கப்போகிற தெய்வீக ஆட்சி முறையின் கொள்கையை அவருடைய ஆவிக்குரிய, அதைப் போலவே பூமிக்குரிய நிலையிலிருக்கிற சிருஷ்டிகள் எல்லார் மத்தியிலும் விளக்கிக் காட்ட தீர்மானித்திருந்தார். அநேக நூற்றாண்டுகளுக்குப் பிறகு, ஆதாமின் பிள்ளைகளின் ஏழாம் தலைமுறையில், ஒருவரான ஏனோக்கின் மூலமாக, தேவன் தீர்க்கதரிசனமாக, மனிதர்கள் மத்தியில் நீதியை நிலைநாட்ட "**இதோ, (பூமியில்) எல்லாருக்கும், நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும் .......... ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார்**" என்று கூறினார். காலம் கடந்து சென்றது, ஆனால் பாவம் நீடித்திருந்தது, அத்துடன் மகாபெரிய விடுதலையாளர் வருவது இன்னும் எதிர்காலத்தில் என்றானது. (யூதா 14, 15).

அடுத்ததாக தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தையும் உத்தமத்தையும் பரீட்சித்தபின் அவரிடம் பேசினார். சர்ப்பத்தின் தலையை நசுக்கப் போகும் அந்த மகாப்பெரிய விடுதலையாளர் மிகுந்த மகிமையோடு ஆயிரமாயிரமான தம்முடைய பரிசுத்த வான்களோடுகூட வரப்போகிறதைப் பற்றி அவரிடம் அவர் குறிப்பிட்டார். ஆபிரகாமிடம் அவர், இந்த ஒருவர் ஏதோ ஒரு வழியில் அவருடைய சந்ததியில் அடையாளப்படுத்தப்பட்டு, அதன் மூலமாக அவர் மிகச் சரியாக ஆபிரகாமின் வித்து என அழைக்கப்படுவார் என்றும் உறுதியளித்தார். "**பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்**" (ஆதி. 12 : 3) என்று தேவன் கூறினார். தெய்வீக திட்டம் மாற்றப்படவில்லை, ஆனால் அதைக் குறித்து அதிக விளக்கமான வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதன்பின்பு, தேவனால் போதிக்கப்பட்ட யாவரும், ஆபிரகாமின் வித்தின் மூலமாக மேசியாவின் ஆசீர்வாதங்களுக்கு எதிர்பார்த்திருக்க அறிந்து கொண்டார்கள். மேலும் இந்த உடன்படிக்கையானது ஆபிரகாமுக்கும், அதன் பிறகு ஈசாக்குக்கும், அதன் பிறகு யாக்கோபுக்கும் ஓர் ஆணையோடு உறுதிப்படுத்தப்பட்டது. அந்த உடன்படிக்கையின் வாக்குத்தத்தம் இஸ்ரயேல் தேசம் முழுவதையும், யாக்கோபின் எல்லா பிள்ளைகளையும் தேவன் சுவிகாரமாக எடுத்துக் கொண்டதற்கு அடிப்படையாகியது. அவர்கள் ஆபிரகாமிய உடன்படிக்கையான ஆணையோடு கூடிய உடன்படிக்கையின் சுதந்தரவாளிகளாயிருந்தார்கள். சர்வ வல்லமையுள்ள தேவனிடமிருந்து பெற்ற மிகப்பெரிய மேன்மை யூத ஜனங்களில் சிலரை அகந்தையுள்ளவர்களாகவும், பெருமையுள்ளவர்களாகவும் சில நேரங்களில் தோன்றப் பண்ணியது, தவறு செய்வது மனித இயல்பு, மன்னிப்பது தெய்வீக இயல்பு என்பதை நாம் மறவாதிருப்போமாக. ஒருவேளை, அவர்களுக்கு பதிலாக நாம் அந்த இடத்தில் இருந்திருப்போமானால் நம்முடைய அபூரணங்கள் இதைப் போலவே அவைகளை வெளிப்படுத்தியிருக்கும். இஸ்ரயேல் மக்களின் பாடுகள் மற்றும் எகிப்தின் அடிமைத்தன அனுபவங்கள் அநேகமாக தேவனுடைய மிகப்பெரிய திட்டத்திற்காக அவர்களை ஆயத்தப்படுத்த அவசியமாயிருந்தன. ஏனென்றால் அவர்கள் நியாயப்பிர

மாணத்தை கைக்கொள்ள வேண்டியதிருந்தது. நித்திய ஜீவன் அதற்கு வெகுமதியாயிருந்தது. எழுதியிருக்கிறபடி, "**அவை களின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்**" (லேவி. 18 : 5). இஸ்ரயேலர், மனுக்குலத்தாரில் மற்றெல்லாரைக் காட்டிலும் அதிகமாக தங்களுக்கான தெய்வீக முன்னுரிமையின் இந்த வெளியரங்கமாக்குதலில் மிகுதியாக களிகூர்ந்தார்கள். நியாயப்பிரமாண உடன்படிக்கை மத்தியஸ்தம் செய்யப்பட்டது. ஒவ்வொரு ஆண்டிலும் அவர்களுக்காக காளைகள் மற்றும் ஆடுகளின் பலிகள் அடையாளமான பாவ நிவாரணமாக செலுத்தப்பட்டது, அதனால் அவர்கள் தேவனுடன் இந்த உடன்படிக்கை உறவுக்குள்ளாக பிரவேசிக்க முடிந்தது. ஆனால் அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முயற்சித்தபோதோ, அவர்கள் ஏமாற்றமடைந்தார்கள். அவர்கள் தோல்வியடைந்தார்கள். தேவனுடைய நியாயப்பிரமாணம் பூரண மனுஷனுடைய திறமைக்குரிய முழுமையான அளவாக இருக்கிறது; அதனால் யூதர்கள், மற்ற மனுஷரைப் போலவே அபூரணமாயிருப்பதால் இயலாத காரியத்தைத் தாங்கள் செய்ய முயன்றதைக் கண்டு கொண்டார்கள்.

எந்த ஒரு யூதனும் நியாயப்பிரமாணத்தை பூரணமாக கைக்கொள்ளவில்லை. ஆகையால் எந்த ஒரு யூதனும் முதலாம் வருடத்திலேயே நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இதை முன்னறிந்தவராய், தேவன் ஒவ்வொரு வருடமும் பாவ நிவிர்த்தியின் நாள் திரும்பத் திரும்ப வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். அதனால் ஜனங்கள் நித்திய ஜீவனை அடைந்து கொள்ள தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியதிருந்தது. வருடத்துக்கு வருடம், பல நூற்றாண்டுகளாக அவர்கள் தோல்வியடைந்தனர், சோர்வானது நம்பிக்கையின் இடத்தை பிடித்துக் கொண்டது. தேவன் அவர்களுக்கு காளைகள், வெள்ளாட்டுக்கடாக்களைப் பார்க்கிலும் "மேலான பலிகளின்" அவசியத்தைப் பற்றிய ஓர் மாபெரும் பாடத்தை போதித்துக்கொண்டிருந்தார், மேலும் அவருடைய பார்வையில் நீதிமானாக்கப்படுதலுக்கு வேறெந்த வழியும் இல்லை என்பதையும்கூட அவர்களுக்கு போதித்தார். அவர்கள் இந்த உடன்படிக்கையின் கீழ் ஆசீர்வாதங்களை, போதனை (கல்வி) சம்பந்தமான ஆசீர்வாதங்களைப் பெற்றார்கள், ஆனாலும் நம்பியிருந்த ஆசீர்வாதத்தையோ நித்திய ஜீவனையோ பெறவில்லை. அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தபடியே எல்லா ஜாதிகளும் ஆசீர்வதிக்கப் படும்படியாக, தேசிய அளவிலான மேசியாவாக, ஆபிரகாமின் தேசிய வித்தாக ஆகிற நிலையில் இஸ்ரயேலர் இருக்கவில்லை. ஒரு காலத்தில், தேவன் அவர்களுக்கு ராஜாக்களைக் கொடுத்தார், ஆனால் அந்த ராஜாக்கள் அவர்கள் நம்பியிருந்த பெரிய காரியங்களை நிறைவேற்ற முடியாதவர்களாக இருந்தனர். ஆனால் தனிப்பட்டதொரு மேசியா பற்றிய வாக்குத்தத்தம் செய்யப்பட்டது, அவர் தாவீதின் வம்சா வழியில் ஓர் மாபெரும் ராஜாவாக மகா ஞானமும் ஐசுவரியமுள்ள சாலொமோனைக் காட்டிலும் அதிக மேன்மையுள்ளவராக இருப்பார் - மேசியா தாவீதின் குமாரனும், தாவீதின் ஆண்டவருமாக இருப்பார். (சங். 110 : 1; மத். 22 : 42-44). இங்கே தேவன் திட்டமிட்டபடி இஸ்ரயேல், தனிப்பட்ட ஒரு மேசியாவாகிய மகிமையின் ராஜாவைப் பற்றியும், அவர் தங்கள் தேசத்தை உலகத்தை ஜெயிக்க தமது கருவியாக பயன்படுத்துவார் என்றும் அப்போது முழங்கால் யாவும் முடங்கும், நாவுகள் யாவும் தேவனுடைய மகிமையை அறிக்கையிடும் என்ற எண்ணத்தை பெற்றுக் கொள்ளத் தொடங்கினார்கள். இஸ்ரயேல் கற்றுக்கொள்ள வேண்டியிருந்த இரண்டாவது பாடம், யுக மாறுதல் வர வேண்டும் என்பதாகும். மோசே நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராயிருந்தது போல நிறைவேறுதலான மோசே, மோசேயைக் காட்டிலும் பெரியவராக, இன்னும் சிறந்ததான ஒரு உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் மற்றும் சிலாக்கியங்களுக்குள்ளாக, அவர்களைக் கொண்டு வருவார். அந்த உடன்படிக்கை அவர்களுக்கு மிகவும் அனுகூலமான ஒரு உடன்படிக்கை யாகும். அதன்கீழ் அவர்கள் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வார்கள். இந்த புது உடன்படிக்கையானது குறிப்பாக எரேமியா தீர்க்கதரிசியின் மூலமாக அவர்களுக்கு முன்பாக வைக்கப்பட்டது. (எரே. 31 : 31-34). மேலும் இது மாபெரும் மத்தியஸ்தரைப் பற்றி மோசே சொன்ன வாக்கியத்துடன் இணைந்து "***உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்***" என்கிற ஆணையோடு கூடிய ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் மீது புதிய பற்றுறுதியுடன் விசுவாசம் வைக்க உதவியாயிருந்தது.

போதுமான அளவுக்கு மகாபெரிய மத்தியஸ்தர், தேவனுடைய வாக்களிக்கப்பட்ட தூதுவராக வந்து, மேலான உடன்படிக்கையை ஏற்படுத்தினால் அதன்கீழ் இஸ்ரயேல் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளும், அவர் தாவீதின் குமாரன் என்ற வகையில், அவர்களுடைய ராஜாவாக இருந்தால், மெய்யாகவே ஆபிரகாமின் வித்தாக, இஸ்ரயேல் தேசம் அந்த மகாப்பெரிய மத்தியஸ்தரான ராஜாவின்கீழ், பூமியின் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்க முற்றிலுமாக தகுதிப்படுத்தப் பட்டிருக்கும். இந்த மகிமையான எண்ணம் அவர்களுடைய தேசத்துக்கு புத்துணர்ச்சியான ஊக்கமளித்தது. கோரேஸ் ராஜாவின் கட்டளையின் கீழ் இஸ்ரயேலின் எல்லா கோத்திரங் களிலிருந்தும் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பலதரப்பட்ட ஐம்பதாயிரம் யூதர்களை அதனைச் சுற்றிலும் கூட்டிச் சேர்த்தது. எசேக்கியேல் தீர்க்கதரிசியின் மூலமாக, கர்த்தர் சீனாய் மலையில் செய்யப்பட்ட அவர்களுடைய நியாயப்பிரமாண உடன்படிக்கையானது அவர்களுடைய மிகப்பெரிய ஆசீர்வாதமான திரும்பக் கொடுத்தலுக்கு முன்பாக, புது உடன்படிக்கையெனும் ஒரு மேலான உடன்படிக்கைக்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கிறது என்ற உண்மையை தெளிவாக குறிப்பிட்டார். அவர்களை சகல தேசங்களிலிருந்து அவர் மீண்டும் கூட்டிச் சேர்த்து, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை அவர்களுக்கு நிறைவேற்றி, அவர்களைப் பெரிய ஜாதியாக்கி, மற்ற ஜாதிகளை ஆசீர்வதிக்கப் பயன்படுத்தும் காலத்தைப் பற்றி கர்த்தர் சொல்லும்போது, "**இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் நிமித்தம் அல்ல, ....... என் பரிசுத்த நாமத்தினிமித்தமே நான் இப்படிச் செய்கிறேன்**" என்று அறிவிக்கிறார். அதன் பின்பு அவர் அவர்களை தமது அன்பு மற்றும் தயவுக்குள்ளாக மீண்டும் சேர்த்துக் கொள்வார் என்றும் தாழ்ந்தவர்கள் மற்றும் பாவிகள் என்று இஸ்ரயேலர்கள் கருதி வெறுத்து ஒதுக்கிய சமாரியர்கள் மற்றும் சோதோமின் ஜனங்களுக்கு (எசே. 36 : 22) இழந்து போனதை திரும்பக் கொடுத்தலின் மூலம் இஸ்ரயேலருடைய பெருமையையும்கூட தாழ்த்துவார் என்றும் அவர்களிடம் கூறினார். இந்த ஜனங்களில் ஒருவரும் இஸ்ரயேலரைப் போல ஒருபோதும் தேவனுடைய நற்குணத்துக்கு எதிராக பயங்கரமான பாவங்களை செய்ததில்லை என்றும், இஸ்ரயேலை மீண்டும் அவர் ஆசீர்வதிக்கும்போது, அவர்கள் **சீருக்குத் திரும்புவீர்கள்...... ஆகிலும், உன் இளவயதில் உன்னோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் நினைத்து, நித்திய உடன்படிக்கையை உனக்கு ஏற்படுத்துவேன்..... அவர்களை** (சோதோமியர் மற்றும் சமாரியர்கள்) **நான் உனக்குக் குமாரத்திகளாகக் கொடுப்பேன்:**





**ஆனால், உன்னுடைய உடன்படிக்கையின் படியல்ல** (ஆங்கில வேதாகமம் பார்க்கவும்) (பழைய நியாயப்பிரமாண உடன் படிக்கையின் கீழல்ல; ஆனால் வருங்காலத்துக்குரிய புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழாக) **உன்னோடே என் உடன்படிக்கையைப் பண்ணி ஏற்படுத்துவேன்: .......... நீ செய்த எல்லாவற்றையும் நான் மன்னித்தருளும் போது,** (அதை நிறைவேற்றும்போது) **நீ நினைத்து வெட்கி, உன் நாணத்தினால் உன் வாயை இனித் திறக்கமாட்டாதிருப்பாய் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.**" (எசே. 16 : 55-63).

## அவருடைய வருகையின் நாளில் நிலைத்திருத்தல்

இந்த புதிய மற்றும் மேலான உடன்படிக்கையானது ஓர் தனிப்பட்ட மேசியாவின் மூலமாக மத்தியஸ்தம் செய்யப்பட வேண்டியதாயிருக்கிறது. அவர் மோசேயைக் காட்டிலும் அதிக மகிமையான மத்தியஸ்தர்; தாவீதைக் காட்டிலும் மேலும் அதிக மகிமையான ராஜா; இவருக்காவே இஸ்ரயேல் நீண்ட காலமாக வாஞ்சையுடன் எதிர்பார்த்து காத்திருந்தது. கல்வாரியில் மரித்த அந்த தாழ்மையான நசரேயனாகிய அவரை அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளத் தவறிவிட்டதைக் குறித்து நாம் ஆச்சரியப்பட முடியுமா? நம்மால் முடியாது! பரிசுத்தாவியின் விசேஷித்த உதவியினால் மட்டுமே ஒருவன், தீர்க்கதரிசனங் களின் மகிமையான காட்சிகளுக்கும், அந்த தீர்க்கதரிசனங் களை நிறைவேற்ற வந்தவருடைய தாழ்மையான தோற்றத் திற்கும் இடையே உள்ள தொடர்பை ஆராய்ந்து தேடிக் கண்டுபிடிக்க முடியுமே தவிர வேறெதுவினாலும் அல்ல. ஆயினும் மகிமையான மகா மேசியாவாகிய இயேசு தமது இரண்டாம் வருகையில் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும், யூதர்களுடைய எதிர்பார்ப்பின் ஒவ்வொரு தேவையையும், தீர்க்கதரிசன வரைகுறிப்பின்படி முழுமையாக நிறைவேற்றுவதை நாம் காண்கிறோம். அவர்கள் குத்திய அவரே தேவனுடைய குமாரனாக மிகுந்த மகிமையோடு இஸ்ரயேலை யும் இஸ்ரயேல் மூலமாக பூமியின் வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிப்பார் என்று சிலர் காண முடிகிறது, ஆனால் மற்றவர்களால் இன்னும்கூட காண முடியவில்லை. நம் முடைய பாடத்தின் தலைப்பு வசனமானது இன்னொரு தீர்க்கதரிசனத்திலிருந்து இதே மகா மேசியா புதிய உடன் படிக்கையின் மத்தியஸ்தர், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும் அவருடைய பிதாவாகிய மகா யேகோவாவின் பிரதிநிதியாகவும், எல்லா சத்துருக்களையும், பாதப்படியாக்கிப் போடும் வரைக்கும், சாத்தான் கட்டப்பட்டு, அத்துடன் முடிவாக அவன் நசுக்கப்படும் வரைக்கும்; ஆதாமும், அவனது சந்ததியும் தெய்வீக ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப் பட்டு, புது உடன்படிக்கையின் சிலாக்கியங்களின்கீழ் பாவம், சீரழிவு, மரணம் ஆகியவற்றிலிருந்து பூரணம் மற்றும் நித்திய ஜீவனுக்கு தூக்கி எழுப்பப்பட்டு, விருப்பப்படாதவர்களும், கீழ்ப்படியாதவர்களும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படும் வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டியது பற்றி பேசுகிறது. மல்கியா தீர்க்கதரிசி, தாம் அறிவிக்கின்ற புது உடன்படிக்கையின் மேசியாவே இஸ்ரயேல் ஜனங்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்து காத்திருந்தவரும், அவர்கள் சிந்தித்து களிகூர்ந்த மகிமையான மத்தியஸ்தரும், நிறை வேறுதலான ராஜாவுமானவர் என்று சுட்டிக்காட்டுகிறார். அவர் ஆலயத்துக்கு வருவார் என்பது அவர் நிறைவேறுதலான தீர்க்கதரிசியாக நிறைவேறுதலான ராஜாவாக மட்டுமல்லாமல், "**மெல்கிசேதேக்கின் முறைமையின்படியே**" நிறைவேறுதலான ஆசாரியராகவும் வருவார் என்பதை குறிப்பால் உணர்த்துகிறது.

ஆனால் இந்த சந்தோஷமான அறிவிப்புக்குப் பிறகு, அவர்களுடைய நீண்ட கால எதிர்பார்ப்பும், மகிமைப்படுத்தப் பட்ட புது உடன்படிக்கையின் மத்தியஸ்தருக்காக காத்திருந்த பின்பு அவருடைய நாள் சோதனையின் ஒரு நாளாக, கர்த்தர் நிறைவேறுதலான ஆசாரியர்களையும், நிறைவேறுதலான லேவியர்களையும், நிறைவேறுதலான ஆலயத்தில் சேவிக்க தெரிந்து கொள்ளும் விசேஷமான பரீட்சையும், நிரூபித்துக் காட்டும் ஒன்றாகவும் இருக்கும் என்று எச்சரிக்கப்பட்டார்கள். அவர் உலோகத்திலுள்ள கசடுகளை நீக்கி சுத்தமானதை பிரித்தெடுக்கும்படி புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலிருப்பார். அக்கினிமயமான சோதனைகளும், பரீட்சை களும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. அழைக்கப்பட்டவர் களையும், தெரிந்தெடுக்கப்பட்டவர்களையும், உண்மையுள்ளவர் களையும் ராஜ்யத்துக்கு தகுதியாக்கும் மகா பெரிய சுத்திகரிப்பு வேலை நடைபெறும் என்ற கருத்தில் அவர் "**வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலவும்**" இருப்பார். (மல். 3 : 2) அப்பொழுது யூதேயாவிலும் எருசலேமிலும் கர்த்தருக்கென்று செய்யும் பிரதிஷ்டை, பூர்வ காலத்திலிருந்ததைப் போல ஏற்றுக் கொள்ளப்படும். இந்த பக்தியின் ஆவி யூதர்கள் மத்தியில், குறிப்பாக எருசலேம் மற்றும் சீயோனிஸ இயக்கத்தில் தங்களை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டவர்கள் மத்தியில் எழுப்புதலை ஏற்படுத்தியது என்று நாம் புரிந்து கொள்கிறோம். இதற்கு முன்பாக இது யூதருடைய நாட்டுரிமையிலும் நாடு கடத்தப்பட்டவர்களுக்கு புகலிடம் பெறுவதிலும் அக்கறையுள்ள அரசியல் ரீதியான இயக்கமாக இருந்தது. விசுவாசம் உள்ளவர்கள் தேவனிடம் நெருங்கி வருவதற்கும், அந்த விசுவாசத்தை பூமிக்குரிய எருசலேமும், அதனுடைய நலன்களும் திரும்பக் கிடைப்பதற்காக எதிர்பார்த்து காத்திருப் பதன் மூலம் எடுத்துக் காட்டவும் ஏற்ற சமயம் வந்திருக்கிறது.

பிதாவின் முதற்பேறானவராக, சிருஷ்டிப்பின் மகா பெரிய வேலையில் அவருடைய மகிமையான பிரதிநிதியாக இருந்தவருக்கு, உடன்படிக்கையின் மகாபெரிய தூதராகவும், மகாபெரிய தீர்க்கதரிசியும், இஸ்ரயேலின் ஆசாரியனும் ராஜாவும், தானியேலில் சொல்லப்பட்ட மகாப்பெரிய மிகாவேலு மாக ஆகும்படியான (தானி. 12 : 1) கனம் அவருக்கு கொடுக்கப் பட்டிருந்தது. ஆனால் இந்த உயர்ந்த ஸ்தானத்தை அவர் பெற்றுக் கொள்வது தொடர்பாக பல பரீட்சைகள் அவருக்




நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் ...நிழலாய் மாத்திரம் இருக்கிறது. எபி. 10 : 1

கிருந்தன. (1) விசுவாசத்தினால் அவர் தமது பரலோக மகிமையை விட்டுவிட்டு பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்து மனுஷனாக வேண்டும். ஒரு பாவ மனுஷனாக அல்ல. ஆனால் ஒரு பூரண மனுஷனாக பரிசுத்தமானவராக குற்றமற்றவராக, கறைதிரையற்றவராக, பாவிகளிலிருந்து விலகினவராக இருக்க வேண்டும். (2) இந்த வழியில் மீட்பராக ஆயத்தப்படுத்தப்பட்டார், அவருடைய பூமிக்குரிய உரிமைகளை முழுமையாக பிரதிஷ்டை செய்வது அவருக்கு கிடைத்த சிலாக்கியமாகும், அத்துடன் யோர்தானில் பரிசுத்தாவியால் ஜெநிப்பிக்கப்பட்டு, மிக உயர்ந்த நிலையில், ஆவிக்குரிய சுபாவத்திற்கு உயர்த்துவது பிதாவுக்குப் பிரியமாயிருந்தது. மூன்றரை ஆண்டுகளாக அவருடைய பலி, பலிபீடத்தின்மீது எரிந்தது. உண்மையில் இது எருதுகள் மற்றும் வெள்ளாடு களின் பலிகளைப் பார்க்கிலும் மேலானதாயிருந்தது; ஏனெனில் இது ஆதாமுக்கு சரிநிகரான விலைக்கிரயமாக – கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல், மனுஷனுடைய ஜீவனுக்கு பதில் ஒரு மனுஷனுடைய ஜீவனாக இருந்தது. (3) இயேசு தம்முடைய பூமிக்குரிய ஜீவனை பலியாகக் கொடுத்த போது அவர் மானிட நிலைமையிலிருந்து ஆவிக்குரிய சுபாவத்திற்கு மறுரூபமடையும் அனுபவத்தை உயிர்த்தெழுதலில் பெற்றுக் கொண்டார். அந்த நிலை அவர் ஆதியிலிருந்ததைப் போலிருந் தாலும் மிக உயர்ந்ததும், அதிக மகிமையானதுமாக இருந்தது. அவர் ஒரே சமயத்தில் பலியாகவும், அந்த பலியை சமர்ப்பித்த ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்ட ஆசாரியனாகவும் இருந்தார். அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபோது அவருடைய தனிப்பட்ட பலித்தியாகம் முடிவடைந்திருந்தது. ஓர் ஆவி ஜீவியாக அவருடைய தனிப்பட்ட பூரணமடைதல் முழுமையடைந் திருந்தது. (எபி. 10 : 1-14; 13 : 11-13). பின்பு ஏன் அவர் உடனடியாக தீர்க்கதரிசியாக, ஆசாரியனாக, இராஜாவாக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இஸ்ரயேலுக்காகவும், இஸ்ரயேலின் மூலமாக உலகத்தாருக்காகவும் தம்முடைய மாபெரும் வேலையை ஆரம்பிக்கவில்லை? அது ஏனென்றால், நிறைவேறுதலான பாவ நிவாரண நாள் பற்றிய தேவனுடைய திட்டத்தில் ஒரு பலிக்கும் மேலான ஒரு காரியம் நடக்க வேண்டியதிருந்தது. இந்த சுவிசேஷ யுகம் முழுவதுமாக, உயிர்த்தெழுந்து மகிமைப்படுத்தப்பட்ட பிரதான ஆசாரியர், மத்தியஸ்தர், தீர்க்கதரிசியும் ராஜாவுமானவர் தம்முடைய ஆசீர்வதிக்கிற மகிமையின் ராஜ்யத்தைத் தொடங்கி வைக்க காத்துக் கொண்டிருக்கிறார். காத்திருக்கிற அவ்வேளையில் கையளவு பரிசுத்தவான்கள் உலகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டு, பரீட்சிக்கப்பட்டு, பாத்திரவான்களாக ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டு அவரோடுகூட மகிமைப்படுத்தப்பட வேண்டும். அது யூதர்கள் மற்றும் புறஜாதியாராகிய மனுக்குலத்திலிருந்து எடுக்கப்பட்ட “சிறுமந்தை”யே ஆகும்.

மணவாட்டி வகுப்பார் தங்களுடைய பலியை மகா பிரதான ஆசாரியனுடைய புண்ணியத்திலும், அதன் கீழும் நிறைவேற்றியிருக்கிறார்கள். இப்போது ஆபிரகாமின் வித்தாக இஸ்ரயேலும் இஸ்ரயேல் மூலமாக எல்லா ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படுவதற்கான ஒவ்வொரு ஏற்பாடும் நடந்தேற முடியும். இந்த வழியில் இஸ்ரயேலின் புது உடன்படிக்கையின் மகா தூதனானவருடைய வெளிப்படுதல் யூதர்களுக்கு மட்டுமல்லாமல், உலக மனுக்குலத்தாருக்கும்கூட மிகவும் முக்கியமானதாயிருக்கிறது, அவர்களும் இஸ்ரயேலின் கீழ் அதே புதிய நியாயப்பிரமான உடன்படிக்கைக்கு இணங்கி கீழ்ப்படிந்து நடப்பதன் மூலமாக தங்கள் ஆசீர்வாதங்களை நிச்சயம் பெற்றுக் கொள்வார்கள். மேலும், இடைக்காலத்தில் (சுவிசேஷ யுகம்) பிரித்தெடுக்கப்பட்டு, அழைக்கப்பட்டு கூட்டிச் சேர்க்கப்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட கையளவு பரிசுத்தவான்கள் தேவனுடைய மகிமையான ராஜ்யத்தில் ஆழ்ந்த அக்கறை யுள்ளவர்களாயிருந்தார்கள்; ஏனெனில் அவர்கள் தங்கள் எஜமானரைப் போல மறுரூபமடைந்து அவருடைய மகிமையை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது தேவ வாக்குத்தத்தமாக இருந்தது. தீர்க்கதரிசியின் மூலமாக கர்த்தர் மேலும் கூறும் செய்தியைக் கவனியுங்கள், “**நான் நியாயத்தீர்ப்பு செய்யும்படி உங்களிடத்தில் வந்து, சூனியக்காரருக்கும், விபசாரருக்கும், பொய்யாணை இடுகிறவர்களுக்கும், எனக்குப் பயப்படாமல் விதவைகளும் திக்கற்ற பிள்ளைகளுமாகிய கூலிக்காரரின் கூலியை அபகரித்துக் கொள்ளுகிறவர்களுக்கும், பரதேசக்கு அநியாயஞ் செய்கிறவர்களுக்கும் விரோதமாய்த் தீவிரமான சாட்சியாயிருப்பேன்.**” (மல். 3 : 5). ஆம், இங்கே மேசியாவின் ராஜ்யம் என்பது, அவர் தம்முடைய ஊழியக்காரர்களாக ஏற்றுக் கொள்கிறவர் களுக்கு மகிமையும், கனமுமாயிருப்பது மட்டுமல்ல, ஆனால் சத்தியம், பரிசுத்தம் மற்றும் தேவனுடன் இசைந்திருத்தலின் கோட்பாடுகளின் தேவைகளுக்கு விசுவாசமாயிருப்பதை அர்த்தப்படுத்துகிறது என்பது, தெளிவாக சொல்லப்பட்டிருப் பதை நாம் இங்கே காணவில்லையா? மேலும் யூதர்களுக் கான இந்த பாடமானது, அவருடைய புது உடன்படிக்கை ஏற்பாடுகளின் கீழ், எல்லா ஜாதியாருக்கும் முடிவில் நடைமுறைப்படுத்தப்படும். புதிய ஒழுங்கின்படி, இஸ்ரயேலின் புதிய உடன்படிக்கையின் கீழ், பூமியிலுள்ள சகல ஜாதிகளும் இஸ்ரயேலுக்கும் பூமியிலுள்ள சகல ஜாதிகளுக்குமுரிய மகா பெரிய மத்தியஸ்தரிடம் உள்ள விசுவாசத்தின் மூலமாக “உத்தம இஸ்ரயேலர்களாக” ஆகும் சிலாக்கியத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.

***

Visit us at : **www.biblestandardindia.com**

*For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :*

**Bro. V. Vincent Jeyakumar**

**Laymen's Home Missionary Movement**

#11/119-3, Near Water tank, South Street, Mukuperi - 628 616
(Near Nazareth), Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY